A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 43 / 2024**

திருமதி. T. பேபி,
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு M. வெங்கடேசன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c)
திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி
திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி)

**மனு பெறப்பட்ட நாள்: 30-05-2024**

**கேட்புரை நாள் : 08-08-2024**

**ஆணை நாள்: 16-08-2024**

30.05.2024 அன்று பெறப்பட்ட திருமதி. T. பேபி, எண்.3/81, பணங்தொப்பு ஏரி, சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் – 635 752 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 43/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணைதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 இதன் தொடர்பாக மேற்கூறிய இடத்தை கள ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து, மதிப்பீடு தொகை செலுத்தும்பட்சத்தில் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற தகவல் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 19.09.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் 22.01.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 22.01.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*"மேற்காணும் தீர்வின்படி மனுதாரர் தனது வீட்டிற்கு மின்இணைப்பு பெற புதிய விண்ணப்பம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து உரிய மதிப்பீடு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி மின்இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மனு முடித்து வைக்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு M. வெங்கடேசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c), திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி மற்றும் திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தான் ஆதரவற்ற விதவை பெண் தனியாக வாழ்ந்து வருவதாகவும், தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து இணைய வழி பணம் ரூபாய் 2818/- செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் எனவும், நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு எட்டப்படாததால் திருப்பத்தூர் மாவட்ட மின் குறைதீர் அலுவலர் இடம் இணைய வாயிலாக விண்ணப்பம் செய்து இருந்ததாகவும், அதன் மீது 28.12.2023 அன்று விசாரணைக்கு அழைத்ததாகவும், அன்று நடந்த அமர்வில் தன் தரப்பு வாதம் முழுமையாக கேட்கக் படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆனால் மாவட்ட மின் குறைதீர்ப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிசுதாரர் அடிப்படையில் மின் கம்பம் அமைக்கும் இடம் சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்தது எனவும், மேலும் தனது மின் இணைப்பு கோரி நான் 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் 2818/- குறித்து எந்த தீரப்பும் வழங்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் வீட்டு மற்றும் பொது பயன்பாட்டு மின் விரிவாக்க செலவுகள் விதிகள் குறித்து தமிழ்நாடு அரசு மின் வாரியம் அரசிதழ் Vol IX எண் 5 SE/IEM/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992-இல் சுற்றறிக்கையில் என்னென்ன நேர்வுகளில் விரிவாக்க செலவு விதிகள் பின்வருமாறு தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

> *1.The entire cost of extension and improvement if any upto the premies of the consumer just outside his boundary shall be chargeable to the board.*
> *2. The portion of the lines laid within consumers premises shall be chargeable to the consumer*

5.5 ஆனால் தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரியம் Vol IX எண் 5 Memo No. SE/IEMC/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992 இல் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் பாலம்மாள் காலணி திருப்பத்தூர் அவர்களிடத்தில் 19.09.2023 தேதியில் மனு செய்யப்பட்டு 28.12.2023 அன்றைய தினம் கலந்துரையாடல் செய்யப்பட்டு 22.01.2024 அன்றைய தினம் வழங்கப்பட்ட தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/- செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை

உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே சென்றுக்கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt.18.05.1992–ன்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இதன்தொடர்ச்சியாக மதிப்பீட்டு அனுமதியின்படி புதிய மின்பாதை அமைக்கப்படும் இடம் மேல்முறையீட்டாளரின் தந்தை மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட நிலமாகும் என்பதாலும், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு (பட்டா எண் 460 இன்படி) கிராம சர்வே எண் 125/1H1A நிலத்தில் அமைந்துள்ளது என FMB யில் கையொப்பம் இட்டு வரைபடம் அளித்துள்ளதின் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EES/AEE2/86/92(Technical Branch), dt.18.05.1992–ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்த கடிதம் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இதன் அடிப்படையிலேயே மாவட்ட குறைதீரப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிய கற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt. 18.05.1992–ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே

எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 அதன் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண் SE/IEMC/EE3/AEE2/ 66/92(Technical Branch), dt. 18.05.1992–ன்படி வாரிசுதாரர் என்பதால் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடம் என்பது தெளிவாக தெரியவருகிறதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு கோரி 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் ரூ.2818/– இணையதளம் வழியாக செலுத்தியுள்ளதை திரும்ப பெற உரிய வகையில் விண்ணப்பம் பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் பதிவு கட்டணம் திரும்ப வழங்கிட வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு கோரும் இடம் சம்பந்தமான புகைபடம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், எந்தவித மின்இணைப்பும் இங்கு இல்லை. (சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A–ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு இம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் திரு, விஜயன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–344 என்ற வீட்டு மின்இணைப்பும். 125/1C இல் திரு.கோவிந்தசாமி த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–824 என்று வீட்டு மின் இணைப்பும், 125/1D இல் திரு. கிருஷ்ணன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–298 என்ற வீட்டு மின்இணைப்பும், வீடு 125/1E இல் திரு.லோகநாதன் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423–010–689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G இல்

திரு.சிவலிங்கம் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423-010-295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1 இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 அதாவது, 125/1A1 மற்றும் 125/1H1A இரண்டும் மேற்படி மேல்முறையீட்டாளரின் தந்தை (லேட்) திரு. திருப்பதி த/பெ.முத்த கவுண்டர் அவர்களுக்கு கூட்டுப்பட்டாவாக உள்ள நிலத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருத்த தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து 125/1A1 புதியதாக 11.0 மீட்டர் தொலைவில் ஒரு மின்கம்பம் அமைத்தும், அவற்றில் இருந்து 27.0 மீட்டர் தொலைவில் மேற்படி, சின்னவேப்பம்பட்டு நத்தம் கிராம சர்வே எண் 125/1C மற்றும் 125/1D இடைவெளியில் மின்பாதை செல்லும் வகையில், 125/1H1A என்ற சர்வே எண்ணில் மேலும் ஒரு மின் கம்பம் அமைத்து, 65 அடி தொலைவில் அமைந்துள்ள மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கும் விதத்தில் மதிப்பீடு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 அதாவது, புதியதாக மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடங்கள் மேல்முறையீட்டாளரின் தந்தைக்கு கூட்டுப்பட்டாவின் படி சொந்தம் என்பதால், வாரிய விதிமுறைப்படி மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடம் மனுதாரருக்கு வாரிசுரிமைப்படி பாத்தியப்பட்டதால், மின்நுகர்வோர் மின்விஸ்தரிப்பு கட்டணம் செலுத்தும் வகையில் மதிப்பீட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 மேலும், திருமதி. பேபி அவர்கள் கட்டியுள்ள வீடு தனது தந்தை திரு. திருப்பதி அவர்களின் பெயரில் கூட்டுபட்டாவாக உள்ள சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A என்ற விவசாய நிலத்தில் தான் அமைந்துள்ளதாகவும், மேலும், சின்னவேப்பம்பட்டு ஊராட்சி மூலமாக திருமதி, பேபி அவர்கள், அவர்களின் வீட்டு

மின்னிணைப்பு பெறவேண்டி 2018-2019 ஆம் வருடத்தில் கைமுறை வீட்டு வரி ரசீது பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 தற்சமயம் சின்னவேப்பம்பட்டு கிராம ஊராட்சியில் விசாரணை செய்ததில் இணையதளம் வழியாக வீட்டு வரி ரசீதுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி திருமதி. பேபி பெயருக்கு வீட்டு வரி ரசீது ஏதும் ஊராட்சி நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை என தெரியவருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

### 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் செய்து இணைய வழியில் பணம் செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் என நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரிய விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/– செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும், அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய விதிகளின்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A–ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும், மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு அம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் 423–010–344 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1C–இல் 423–010–824 என்ற வீட்டு மின் இணைப்பும், 125/1D–இல் 423–010–298 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1E–இல் 423–010–689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G–இல் 423–010–295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இந்நிலையில் திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A–இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1–இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதித்தொகுப்பு விதி 29(16)–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"'29 Service lines:*
> *xxx*
> *(16). Having agreed on the position of point of supply, the Engineer will render to the intending consumer an estimate for the cost of laying the service line for the portion inside the consumer's premises if any, barring the cost of distribution Transfomer and allied structure materials and accessories. Any work of laying the service line will be taken up only after the intending consumer pays such estimated amount in advance in full."*

7.10 மேற்கண்ட விதியின்படி மின்னிணைப்பு தொடர் நுகர்வோரின் வளாகத்தில் அமைக்கப்பட வேண்டிய நேர்வில் மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் மின்மாற்றி மற்றும் அது தொடர்பான மின்சாதனங்கள் ஏதேனும் அமைக்கப்பட நேர்ந்தால் அதற்குண்டான தொகையை தவிர்த்து அவ்வளாகத்தில் அமைக்கப்படும் மின்

தொடருக்கான மதிப்பீட்டு தொகையை முன்கூட்டியே செலுத்தவேண்டும் என அறியமுடிகிறது. கேட்புரையின் போது எதிர்மனுதாரர் தனது வாதத்தில் மேல்முறையீட்டாருக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மின் நீட்டிப்பு செய்ய இரண்டு மின்கம்பங்கள் நடப்பட வேண்டிய நிலையில் அது மேல்முறையீட்டாளரின் தகப்பனாருக்கு சொந்தமான நிலமாக இருப்பதால் வாரிசு உரிமை அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கும் சொந்தமாகும் எனவும், எனவே மேல்முறையீட்டாளர் மின்கம்பங்களுக்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும் எனவும் வாதிட்டுள்ளார்.

7.11 மேலும், மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் உட்பிரிவு செய்யப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் வீடு அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் வீடு அமைந்துள்ள இடம் அவரின் தந்தையான திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமானது எனவும் மேல்முறையீட்டாளர் வாரிசு அடிப்படையிலேயே மின்னிணைப்பு கோருவதாகவும் அறிய முடிகிறது. மேலும் மின் தொடர் அமையவுள்ள மேற்கண்ட பாதையானது கிராம / ஊராட்சி நிர்வாகத்தால் பொதுப்பாதையாக அங்கீகரிக்கப் பட்டதாக அறியப்படவில்லை என்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்படுகிறது.

7.12 எனவே, மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் கேட்புரையின் போது இவ்வழக்கில் எதிர்மனுதாரர் 17.01.2021 அன்று பதிவு செய்த விண்ணப்பத்தை 19.03.2021 அன்று மதிப்பீட்டு கட்டணம் செலுத்தவில்லை என்று விண்ணப்பத்தை ரத்து செய்த பின்பும் அந்த கட்டணத்தை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்கவில்லை என அறியவருதால் விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.0 **முடிவுரை:**

8.1 மேற்கண்ட பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 43/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திருமதி. T. பேபி, – By RPAD
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி, திருப்பத்தூர் – 635 601.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 43 / 2024**

திருமதி. T. பேபி,
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு M. வெங்கடேசன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c)
திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி
திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி)

**மனு பெறப்பட்ட நாள்: 30-05-2024**

**கேட்புரை நாள் : 08-08-2024**

**ஆணை நாள்: 16-08-2024**

30.05.2024 அன்று பெறப்பட்ட திருமதி. T. பேபி, எண்.3/81, பணங்தொப்பு ஏரி, சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் – 635 752 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 43/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணைதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 இதன் தொடர்பாக மேற்கூறிய இடத்தை கள ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து, மதிப்பீடு தொகை செலுத்தும்பட்சத்தில் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற தகவல் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 19.09.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் 22.01.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 22.01.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*"மேற்காணும் தீர்வின்படி மனுதாரர் தனது வீட்டிற்கு மின்இணைப்பு பெற புதிய விண்ணப்பம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து உரிய மதிப்பீடு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி மின்இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மனு முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 **மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு M. வெங்கடேசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c), திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி மற்றும் திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தான் ஆதரவற்ற விதவை பெண் தனியாக வாழ்ந்து வருவதாகவும், தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து இணைய வழி பணம் ரூபாய் 2818/- செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் எனவும், நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு எட்டப்படாததால் திருப்பத்தூர் மாவட்ட மின் குறைதீர் அலுவலர் இடம் இணைய வாயிலாக விண்ணப்பம் செய்து இருந்ததாகவும், அதன் மீது 28.12.2023 அன்று விசாரணைக்கு அழைத்ததாகவும், அன்று நடந்த அமர்வில் தன் தரப்பு வாதம் முழுமையாக கேட்கப் படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆனால் மாவட்ட மின் குறைதீர்ப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிசுதாரர் அடிப்படையில் மின் கம்பம் அமைக்கும் இடம் சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்தது எனவும், மேலும் தனது மின் இணைப்பு கோரி நான் 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் 2818/- குறித்து எந்த தீரப்பும் வழங்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் வீட்டு மற்றும் பொது பயன்பாட்டு மின் விரிவாக்க செலவுகள் விதிகள் குறித்து தமிழ்நாடு அரசு மின் வாரியம் அரசிதழ் Vol IX எண் 5 SE/IEM/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992-இல் சுற்றறிக்கையில் என்னென்ன நேர்வுகளில் விரிவாக்க செலவு விதிகள் பின்வருமாறு தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

> *1.The entire cost of extension and improvement if any upto the premies of the consumer just outside his boundary shall be chargeable to the board.*
> *2. The portion of the lines laid within consumers premises shall be chargeable to the consumer*

5.5 ஆனால் தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரியம் Vol IX எண் 5 Memo No. SE/IEMC/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992 இல் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் பாலம்மாள் காலணி திருப்பத்தூர் அவர்களிடத்தில் 19.09.2023 தேதியில் மனு செய்யப்பட்டு 28.12.2023 அன்றைய தினம் கலந்துரையாடல் செய்யப்பட்டு 22.01.2024 அன்றைய தினம் வழங்கப்பட்ட தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/- செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை

உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே சென்றுக்கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt.18.05.1992–ன்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இதன்தொடர்ச்சியாக மதிப்பீட்டு அனுமதியின்படி புதிய மின்பாதை அமைக்கப்படும் இடம் மேல்முறையீட்டாளரின் தந்தை மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட நிலமாகும் என்பதாலும், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு (பட்டா எண் 460 இன்படி) கிராம சர்வே எண் 125/1H1A நிலத்தில் அமைந்துள்ளது என FMB யில் கையொப்பம் இட்டு வரைபடம் அளித்துள்ளதின் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EES/AEE2/86/92(Technical Branch), dt.18.05.1992–ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்த கடிதம் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இதன் அடிப்படையிலேயே மாவட்ட குறைதீரப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிய கற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt. 18.05.1992–ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே

எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 அதன் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண் SE/IEMC/EE3/AEE2/ 66/92(Technical Branch), dt. 18.05.1992–ன்படி வாரிசுதாரர் என்பதால் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடம் என்பது தெளிவாக தெரியவருகிறதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு கோரி 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் ரூ.2818/– இணையதளம் வழியாக செலுத்தியுள்ளதை திரும்ப பெற உரிய வகையில் விண்ணப்பம் பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் பதிவு கட்டணம் திரும்ப வழங்கிட வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு கோரும் இடம் சம்பந்தமான புகைபடம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், எந்தவித மின்இணைப்பும் இங்கு இல்லை. (சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A–ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு இம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் திரு, விஜயன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–344 என்ற வீட்டு மின்இணைப்பும். 125/1C இல் திரு.கோவிந்தசாமி த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–824 என்று வீட்டு மின் இணைப்பும், 125/1D இல் திரு. கிருஷ்ணன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–298 என்ற வீட்டு மின்இணைப்பும், வீடு 125/1E இல் திரு.லோகநாதன் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423–010–689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G இல்

திரு.சிவலிங்கம் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423–010–295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1 இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 அதாவது, 125/1A1 மற்றும் 125/1H1A இரண்டும் மேற்படி மேல்முறையீட்டாளரின் தந்தை (லேட்) திரு. திருப்பதி த/பெ.முத்த கவுண்டர் அவர்களுக்கு கூட்டுப்பட்டாவாக உள்ள நிலத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருத்த தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து 125/1A1 புதியதாக 11.0 மீட்டர் தொலைவில் ஒரு மின்கம்பம் அமைத்தும், அவற்றில் இருந்து 27.0 மீட்டர் தொலைவில் மேற்படி, சின்னவேப்பம்பட்டு நத்தம் கிராம சர்வே எண் 125/1C மற்றும் 125/1D இடைவெளியில் மின்பாதை செல்லும் வகையில், 125/1H1A என்ற சர்வே எண்ணில் மேலும் ஒரு மின் கம்பம் அமைத்து, 65 அடி தொலைவில் அமைந்துள்ள மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கும் விதத்தில் மதிப்பீடு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 அதாவது, புதியதாக மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடங்கள் மேல்முறையீட்டாளரின் தந்தைக்கு கூட்டுப்பட்டாவின் படி சொந்தம் என்பதால், வாரிய விதிமுறைப்படி மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடம் மனுதாரருக்கு வாரிசுரிமைப்படி பாத்தியப்பட்டதால், மின்நுகர்வோர் மின்விஸ்தரிப்பு கட்டணம் செலுத்தும் வகையில் மதிப்பீட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 மேலும், திருமதி. பேபி அவர்கள் கட்டியுள்ள வீடு தனது தந்தை திரு. திருப்பதி அவர்களின் பெயரில் கூட்டுபட்டாவாக உள்ள சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A என்ற விவசாய நிலத்தில் தான் அமைந்துள்ளதாகவும், மேலும், சின்னவேப்பம்பட்டு ஊராட்சி மூலமாக திருமதி, பேபி அவர்கள், அவர்களின் வீட்டு

மின்னிணைப்பு பெறவேண்டி 2018–2019 ஆம் வருடத்தில் கைமுறை வீட்டு வரி ரசீது பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 தற்சமயம் சின்னவேப்பம்பட்டு கிராம ஊராட்சியில் விசாரணை செய்ததில் இணையதளம் வழியாக வீட்டு வரி ரசீதுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி திருமதி. பேபி பெயருக்கு வீட்டு வரி ரசீது ஏதும் ஊராட்சி நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை என தெரியவருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் செய்து இணைய வழியில் பணம் செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் என நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரிய விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/– செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும், அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய விதிகளின்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HlA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A-ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும், மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு அம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் 423-010-344 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1C-இல் 423-010-824 என்ற வீட்டு மின் இணைப்பும், 125/1D-இல் 423-010-298 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1E-இல் 423-010-689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G-இல் 423-010-295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இந்நிலையில் திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A-இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1-இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதித்தொகுப்பு விதி 29(16)-ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"‘29 Service lines:*
> *xxx*
> *(16). Having agreed on the position of point of supply, the Engineer will render to the intending consumer an estimate for the cost of laying the service line for the portion inside the consumer's premises if any, barring the cost of distribution Transfomer and allied structure materials and accessories. Any work of laying the service line will be taken up only after the intending consumer pays such estimated amount in advance in full."*

7.10 மேற்கண்ட விதியின்படி மின்னிணைப்பு தொடர் நுகர்வோரின் வளாகத்தில் அமைக்கப்பட வேண்டிய நேர்வில் மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் மின்மாற்றி மற்றும் அது தொடர்பான மின்சாதனங்கள் ஏதேனும் அமைக்கப்பட நேர்ந்தால் அதற்குண்டான தொகையை தவிர்த்து அவ்வளாகத்தில் அமைக்கப்படும் மின்

தொடருக்கான மதிப்பீட்டு தொகையை முன்கூட்டியே செலுத்தவேண்டும் என அறியமுடிகிறது. கேட்புரையின் போது எதிர்மனுதாரர் தனது வாதத்தில் மேல்முறையீட்டாருக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மின் நீட்டிப்பு செய்ய இரண்டு மின்கம்பங்கள் நடப்பட வேண்டிய நிலையில் அது மேல்முறையீட்டாளரின் தகப்பனாருக்கு சொந்தமான நிலமாக இருப்பதால் வாரிசு உரிமை அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கும் சொந்தமாகும் எனவும், எனவே மேல்முறையீட்டாளர் மின்கம்பங்களுக்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும் எனவும் வாதிட்டுள்ளார்.

7.11 மேலும், மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் உட்பிரிவு செய்யப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் வீடு அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் வீடு அமைந்துள்ள இடம் அவரின் தந்தையான திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமானது எனவும் மேல்முறையீட்டாளர் வாரிசு அடிப்படையிலேயே மின்னிணைப்பு கோருவதாகவும் அறிய முடிகிறது. மேலும் மின் தொடர் அமையவுள்ள மேற்கண்ட பாதையானது கிராம / ஊராட்சி நிர்வாகத்தால் பொதுப்பாதையாக அங்கீகரிக்கப் பட்டதாக அறியப்படவில்லை என்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்படுகிறது.

7.12 எனவே, மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் கேட்புரையின் போது இவ்வழக்கில் எதிர்மனுதாரர் 17.01.2021 அன்று பதிவு செய்த விண்ணப்பத்தை 19.03.2021 அன்று மதிப்பீட்டு கட்டணம் செலுத்தவில்லை என்று விண்ணப்பத்தை ரத்து செய்த பின்பும் அந்த கட்டணத்தை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்கவில்லை என அறியவருதால் விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.0 **<u>முடிவுரை</u>:**

8.1 மேற்கண்ட பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 43/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திருமதி. T. பேபி, – By RPAD
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி, திருப்பத்தூர் – 635 601.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 43 / 2024</u>**

திருமதி. T. பேபி,
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு M. வெங்கடேசன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c)
திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி
திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 30-05-2024</u>**

**<u>கேட்புரை நாள் : 08-08-2024</u>**

**<u>ஆணை நாள்: 16-08-2024</u>**

30.05.2024 அன்று பெறப்பட்ட திருமதி. T. பேபி, எண்.3/81, பணங்தொப்பு ஏரி, சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் – 635 752 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 43/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணைதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 இதன் தொடர்பாக மேற்கூறிய இடத்தை கள ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து, மதிப்பீடு தொகை செலுத்தும்பட்சத்தில் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற தகவல் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 19.09.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் 22.01.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 22.01.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *"மேற்காணும் தீர்வின்படி மனுதாரர் தனது வீட்டிற்கு மின்இணைப்பு பெற புதிய விண்ணப்பம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து உரிய மதிப்பீடு கட்டனம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி மின்இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மனு முடித்து வைக்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு M. வெங்கடேசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c), திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி மற்றும் திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தான் ஆதரவற்ற விதவை பெண் தனியாக வாழ்ந்து வருவதாகவும், தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து இணைய வழி பணம் ரூபாய் 2818/- செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் எனவும், நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு எட்டப்படாததால் திருப்பத்தூர் மாவட்ட மின் குறைதீர் அலுவலர் இடம் இணைய வாயிலாக விண்ணப்பம் செய்து இருந்ததாகவும், அதன் மீது 28.12.2023 அன்று விசாரணைக்கு அழைத்ததாகவும், அன்று நடந்த அமர்வில் தன் தரப்பு வாதம் முழுமையாக கேட்கக் படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆனால் மாவட்ட மின் குறைதீர்ப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிசுதாரர் அடிப்படையில் மின் கம்பம் அமைக்கும் இடம் சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்தது எனவும், மேலும் தனது மின் இணைப்பு கோரி நான் 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் 2818/- குறித்து எந்த தீரப்பும் வழங்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் வீட்டு மற்றும் பொது பயன்பாட்டு மின் விரிவாக்க செலவுகள் விதிகள் குறித்து தமிழ்நாடு அரசு மின் வாரியம் அரசிதழ் Vol IX எண் 5 SE/IEM/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992-இல் சுற்றறிக்கையில் என்னென்ன நேர்வுகளில் விரிவாக்க செலவு விதிகள் பின்வருமாறு தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

> *1.The entire cost of extension and improvement if any upto the premies of the consumer just outside his boundary shall be chargeable to the board.*
> *2. The portion of the lines laid within consumers premises shall be chargeable to the consumer*

5.5 ஆனால் தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரியம் Vol IX எண் 5 Memo No. SE/IEMC/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992 இல் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் பாலம்மாள் காலணி திருப்பத்தூர் அவர்களிடத்தில் 19.09.2023 தேதியில் மனு செய்யப்பட்டு 28.12.2023 அன்றைய தினம் கலந்துரையாடல் செய்யப்பட்டு 22.01.2024 அன்றைய தினம் வழங்கப்பட்ட தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/– செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை

உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே சென்றுக்கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt.18.05.1992-ன்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இதன்தொடர்ச்சியாக மதிப்பீட்டு அனுமதியின்படி புதிய மின்பாதை அமைக்கப்படும் இடம் மேல்முறையீட்டாளரின் தந்தை மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட நிலமாகும் என்பதாலும், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு (பட்டா எண் 460 இன்படி) கிராம சர்வே எண் 125/1H1A நிலத்தில் அமைந்துள்ளது என FMB யில் கையொப்பம் இட்டு வரைபடம் அளித்துள்ளதின் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EES/AEE2/86/92(Technical Branch), dt.18.05.1992-ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்த கடிதம் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இதன் அடிப்படையிலேயே மாவட்ட குறைதீரப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிய கற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt. 18.05.1992-ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே

எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 அதன் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண் SE/IEMC/EE3/AEE2/ 66/92(Technical Branch), dt. 18.05.1992–ன்படி வாரிசுதாரர் என்பதால் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடம் என்பது தெளிவாக தெரியவருகிறதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு கோரி 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் ரூ.2818/– இணையதளம் வழியாக செலுத்தியுள்ளதை திரும்ப பெற உரிய வகையில் விண்ணப்பம் பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் பதிவு கட்டணம் திரும்ப வழங்கிட வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு கோரும் இடம் சம்பந்தமான புகைபடம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், எந்தவித மின்இணைப்பும் இங்கு இல்லை. (சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A–ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு இம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் திரு, விஜயன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–344 என்ற வீட்டு மின்இணைப்பும். 125/1C இல் திரு.கோவிந்தசாமி த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–824 என்று வீட்டு மின் இணைப்பும், 125/1D இல் திரு. கிருஷ்ணன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–298 என்ற வீட்டு மின்இணைப்பும், வீடு 125/1E இல் திரு.லோகநாதன் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423–010–689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G இல்

திரு.சிவலிங்கம் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423–010–295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1 இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 அதாவது, 125/1A1 மற்றும் 125/1H1A இரண்டும் மேற்படி மேல்முறையீட்டாளரின் தந்தை (லேட்) திரு. திருப்பதி த/பெ.முத்த கவுண்டர் அவர்களுக்கு கூட்டுப்பட்டாவாக உள்ள நிலத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருத்த தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து 125/1A1 புதியதாக 11.0 மீட்டர் தொலைவில் ஒரு மின்கம்பம் அமைத்தும், அவற்றில் இருந்து 27.0 மீட்டர் தொலைவில் மேற்படி, சின்னவேப்பம்பட்டு நத்தம் கிராம சர்வே எண் 125/1C மற்றும் 125/1D இடைவெளியில் மின்பாதை செல்லும் வகையில், 125/1H1A என்ற சர்வே எண்ணில் மேலும் ஒரு மின் கம்பம் அமைத்து, 65 அடி தொலைவில் அமைந்துள்ள மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கும் விதத்தில் மதிப்பீடு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 அதாவது, புதியதாக மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடங்கள் மேல்முறையீட்டாளரின் தந்தைக்கு கூட்டுப்பட்டாவின் படி சொந்தம் என்பதால், வாரிய விதிமுறைப்படி மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடம் மனுதாரருக்கு வாரிசுரிமைப்படி பாத்தியப்பட்டதால், மின்நுகர்வோர் மின்விஸ்தரிப்பு கட்டணம் செலுத்தும் வகையில் மதிப்பீட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 மேலும், திருமதி. பேபி அவர்கள் கட்டியுள்ள வீடு தனது தந்தை திரு. திருப்பதி அவர்களின் பெயரில் கூட்டுபட்டாவாக உள்ள சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A என்ற விவசாய நிலத்தில் தான் அமைந்துள்ளதாகவும், மேலும், சின்னவேப்பம்பட்டு ஊராட்சி மூலமாக திருமதி, பேபி அவர்கள், அவர்களின் வீட்டு

மின்னிணைப்பு பெறவேண்டி 2018-2019 ஆம் வருடத்தில் கைமுறை வீட்டு வரி ரசீது பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 தற்சமயம் சின்னவேப்பம்பட்டு கிராம ஊராட்சியில் விசாரணை செய்ததில் இணையதளம் வழியாக வீட்டு வரி ரசீதுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி திருமதி. பேபி பெயருக்கு வீட்டு வரி ரசீது ஏதும் ஊராட்சி நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை என தெரியவருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் செய்து இணைய வழியில் பணம் செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் என நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரிய விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/– செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும், அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய விதிகளின்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HlA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A–ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும், மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு அம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் 423–010–344 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1C–இல் 423–010–824 என்ற வீட்டு மின் இணைப்பும், 125/1D–இல் 423–010–298 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1E–இல் 423–010–689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G–இல் 423–010–295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இந்நிலையில் திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A–இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1–இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதித்தொகுப்பு விதி 29(16)–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"''29 Service lines:*
> *xxx*
> *(16). Having agreed on the position of point of supply, the Engineer will render to the intending consumer an estimate for the cost of laying the service line for the portion inside the consumer's premises if any, barring the cost of distribution Transfomer and allied structure materials and accessories. Any work of laying the service line will be taken up only after the intending consumer pays such estimated amount in advance in full."*

7.10 மேற்கண்ட விதியின்படி மின்னிணைப்பு தொடர் நுகர்வோரின் வளாகத்தில் அமைக்கப்பட வேண்டிய நேர்வில் மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் மின்மாற்றி மற்றும் அது தொடர்பான மின்சாதனங்கள் ஏதேனும் அமைக்கப்பட நேர்ந்தால் அதற்குண்டான தொகையை தவிர்த்து அவ்வளாகத்தில் அமைக்கப்படும் மின்

தொடருக்கான மதிப்பீட்டு தொகையை முன்கூட்டியே செலுத்தவேண்டும் என அறியமுடிகிறது. கேட்புரையின் போது எதிர்மனுதாரர் தனது வாதத்தில் மேல்முறையீட்டாருக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மின் நீட்டிப்பு செய்ய இரண்டு மின்கம்பங்கள் நடப்பட வேண்டிய நிலையில் அது மேல்முறையீட்டாளரின் தகப்பனாருக்கு சொந்தமான நிலமாக இருப்பதால் வாரிசு உரிமை அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கும் சொந்தமாகும் எனவும், எனவே மேல்முறையீட்டாளர் மின்கம்பங்களுக்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும் எனவும் வாதிட்டுள்ளார்.

7.11 மேலும், மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் உட்பிரிவு செய்யப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் வீடு அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் வீடு அமைந்துள்ள இடம் அவரின் தந்தையான திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமானது எனவும் மேல்முறையீட்டாளர் வாரிசு அடிப்படையிலேயே மின்னிணைப்பு கோருவதாகவும் அறிய முடிகிறது. மேலும் மின் தொடர் அமையவுள்ள மேற்கண்ட பாதையானது கிராம / ஊராட்சி நிர்வாகத்தால் பொதுப்பாதையாக அங்கீகரிக்கப் பட்டதாக அறியப்படவில்லை என்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்படுகிறது.

7.12 எனவே, மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் கேட்புரையின் போது இவ்வழக்கில் எதிர்மனுதாரர் 17.01.2021 அன்று பதிவு செய்த விண்ணப்பத்தை 19.03.2021 அன்று மதிப்பீட்டு கட்டணம் செலுத்தவில்லை என்று விண்ணப்பத்தை ரத்து செய்த பின்பும் அந்த கட்டணத்தை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்கவில்லை என அறியவருதால் விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கண்ட பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 43/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திருமதி. T. பேபி, – By RPAD
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி, திருப்பத்தூர் – 635 601.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 43 / 2024**

திருமதி. T. பேபி,
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு M. வெங்கடேசன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c)
திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி
திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி)

**மனு பெறப்பட்ட நாள்: 30-05-2024**

**கேட்புரை நாள் : 08-08-2024**

**ஆணை நாள்: 16-08-2024**

30.05.2024 அன்று பெறப்பட்ட திருமதி. T. பேபி, எண்.3/81, பணங்தொப்பு ஏரி, சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் – 635 752 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 43/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது தந்தை பெயரில் உள்ள புதிய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணைதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 இதன் தொடர்பாக மேற்கூறிய இடத்தை கள ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து, மதிப்பீடு தொகை செலுத்தும்பட்சத்தில் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற தகவல் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 19.09.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் 22.01.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 22.01.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*"மேற்காணும் தீர்வின்படி மனுதாரர் தனது வீட்டிற்கு மின்இணைப்பு பெற புதிய விண்ணப்பம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து உரிய மதிப்பீடு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிகளின்படி மின்இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு இம்மனு முடித்து வைக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு M. வெங்கடேசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு A. இக்பால் அஹமத், செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி(i/c), திரு A. இக்பால் அஹமத், உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/வாணியம்பாடி மற்றும் திரு P. கார்த்திகேயன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தான் ஆதரவற்ற விதவை பெண் தனியாக வாழ்ந்து வருவதாகவும், தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து இணைய வழி பணம் ரூபாய் 2818/– செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் எனவும், நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு எட்டப்படாததால் திருப்பத்தூர் மாவட்ட மின் குறைதீர் அலுவலர் இடம் இணைய வாயிலாக விண்ணப்பம் செய்து இருந்ததாகவும், அதன் மீது 28.12.2023 அன்று விசாரணைக்கு அழைத்ததாகவும், அன்று நடந்த அமர்வில் தன் தரப்பு வாதம் முழுமையாக கேட்கக் படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆனால் மாவட்ட மின் குறைதீர்ப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிசுதாரர் அடிப்படையில் மின் கம்பம் அமைக்கும் இடம் சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்தது எனவும், மேலும் தனது மின் இணைப்பு கோரி நான் 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் 2818/– குறித்து எந்த தீரப்பும் வழங்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் வீட்டு மற்றும் பொது பயன்பாட்டு மின் விரிவாக்க செலவுகள் விதிகள் குறித்து தமிழ்நாடு அரசு மின் வாரியம் அரசிதழ் Vol IX எண் 5 SE/IEM/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992–இல் சுற்றறிக்கையில் என்னென்ன நேர்வுகளில் விரிவாக்க செலவு விதிகள் பின்வருமாறு தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

> *1.The entire cost of extension and improvement if any upto the premies of the consumer just outside his boundary shall be chargeable to the board.*
> *2. The portion of the lines laid within consumers premises shall be chargeable to the consumer*

5.5 ஆனால் தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரியம் Vol IX எண் 5 Memo No. SE/IEMC/EE3/AEE2/66/92 Technical branch date 18.05.1992 இல் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம், திருப்பத்தூர் மின்பகிர்மான வட்டம் பாலம்மாள் காலணி திருப்பத்தூர் அவர்களிடத்தில் 19.09.2023 தேதியில் மனு செய்யப்பட்டு 28.12.2023 அன்றைய தினம் கலந்துரையாடல் செய்யப்பட்டு 22.01.2024 அன்றைய தினம் வழங்கப்பட்ட தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/- செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை

உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே சென்றுக்கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt.18.05.1992–ன்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இதன்தொடர்ச்சியாக மதிப்பீட்டு அனுமதியின்படி புதிய மின்பாதை அமைக்கப்படும் இடம் மேல்முறையீட்டாளரின் தந்தை மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட நிலமாகும் என்பதாலும், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு (பட்டா எண் 460 இன்படி) கிராம சர்வே எண் 125/1H1A நிலத்தில் அமைந்துள்ளது என FMB யில் கையொப்பம் இட்டு வரைபடம் அளித்துள்ளதின் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண். SE/IEMC/EES/AEE2/86/92(Technical Branch), dt.18.05.1992–ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்த கடிதம் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இதன் அடிப்படையிலேயே மாவட்ட குறைதீரப்பாளர் கூட்ட தீர்ப்பில் வாரிய கற்றறிக்கை எண். SE/IEMC/EE3/AEE2/66/92(Technical Branch), dt. 18.05.1992–ன்படி வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே

எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 அதன் அடிப்படையில் வாரிய சுற்றறிக்கை எண் SE/IEMC/EE3/AEE2/ 66/92(Technical Branch), dt. 18.05.1992–ன்படி வாரிசுதாரர் என்பதால் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடம் என்பது தெளிவாக தெரியவருகிறதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு கோரி 17.01.2021 தேதி அன்று செலுத்திய விண்ணப்ப கட்டணம் ரூ.2818/– இணையதளம் வழியாக செலுத்தியுள்ளதை திரும்ப பெற உரிய வகையில் விண்ணப்பம் பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் அளிக்கும் பட்சத்தில் பதிவு கட்டணம் திரும்ப வழங்கிட வாரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு கோரும் இடம் சம்பந்தமான புகைபடம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், எந்தவித மின்இணைப்பும் இங்கு இல்லை. (சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A–ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு இம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் திரு, விஜயன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–344 என்ற வீட்டு மின்இணைப்பும். 125/1C இல் திரு.கோவிந்தசாமி த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–824 என்று வீட்டு மின் இணைப்பும், 125/1D இல் திரு. கிருஷ்ணன் த/பெ.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு 423–010–298 என்ற வீட்டு மின்இணைப்பும், வீடு 125/1E இல் திரு.லோகநாதன் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423–010–689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G இல்

திரு.சிவலிங்கம் த/பெ.தங்கவேல் அவர்கள் கட்டியுள்ள வீட்டிற்கு 423-010-295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1 இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 அதாவது, 125/1A1 மற்றும் 125/1H1A இரண்டும் மேற்படி மேல்முறையீட்டாளரின் தந்தை (லேட்) திரு. திருப்பதி த/பெ.முத்த கவுண்டர் அவர்களுக்கு கூட்டுப்பட்டாவாக உள்ள நிலத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருத்த தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து 125/1A1 புதியதாக 11.0 மீட்டர் தொலைவில் ஒரு மின்கம்பம் அமைத்தும், அவற்றில் இருந்து 27.0 மீட்டர் தொலைவில் மேற்படி, சின்னவேப்பம்பட்டு நத்தம் கிராம சர்வே எண் 125/1C மற்றும் 125/1D இடைவெளியில் மின்பாதை செல்லும் வகையில், 125/1H1A என்ற சர்வே எண்ணில் மேலும் ஒரு மின் கம்பம் அமைத்து, 65 அடி தொலைவில் அமைந்துள்ள மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கும் விதத்தில் மதிப்பீடு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 அதாவது, புதியதாக மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடங்கள் மேல்முறையீட்டாளரின் தந்தைக்கு கூட்டுப்பட்டாவின் படி சொந்தம் என்பதால், வாரிய விதிமுறைப்படி மின்கம்பங்கள் அமைக்கப்படும் இடம் மனுதாரருக்கு வாரிசுரிமைப்படி பாத்தியப்பட்டதால், மின்நுகர்வோர் மின்விஸ்தரிப்பு கட்டணம் செலுத்தும் வகையில் மதிப்பீட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 மேலும், திருமதி. பேபி அவர்கள் கட்டியுள்ள வீடு தனது தந்தை திரு. திருப்பதி அவர்களின் பெயரில் கூட்டுபட்டாவாக உள்ள சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A என்ற விவசாய நிலத்தில் தான் அமைந்துள்ளதாகவும், மேலும், சின்னவேப்பம்பட்டு ஊராட்சி மூலமாக திருமதி, பேபி அவர்கள், அவர்களின் வீட்டு

மின்னிணைப்பு பெறவேண்டி 2018–2019 ஆம் வருடத்தில் கைமுறை வீட்டு வரி ரசீது பெறப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 தற்சமயம் சின்னவேப்பம்பட்டு கிராம ஊராட்சியில் விசாரணை செய்ததில் இணையதளம் வழியாக வீட்டு வரி ரசீதுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி திருமதி. பேபி பெயருக்கு வீட்டு வரி ரசீது ஏதும் ஊராட்சி நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை என தெரியவருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி T.பேபி தனது ஓட்டு வீட்டிற்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் செய்து இணைய வழியில் பணம் செலுத்தியதாகவும், தனது விண்ணப்பம் மீது மின் கம்பம் அமைக்க வேண்டும் எனவும், அதற்கு பணம் செலுத்த வேண்டும் என நோட்டீஸ் அனுப்பி இருந்ததாகவும், ஆனால் தான் கூலி வேலை செய்து மிகவும் வறுமையில் வாழ்ந்து வருவதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்கும் இடம் தனக்கு சொந்தமானது இல்லை எனவும், எனவே இது குறித்து பல முறை grevience பதிவு செய்தும் உரிய தீர்வு கிடைக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தனக்கு தனது தந்தை சொத்தாக 30 சென்ட் இடம் மட்டுமே சுற்று எல்லைகள் செக்குபந்தி தெளிவாக பதிவு செய்து அளித்து உள்ளதாகவும், மேலும் மின் கம்பம் அமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இடம் தனக்கு தனது தந்தை அளித்துள்ள சொத்தில் இல்லை எனவும், எனவே தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வு தமிழ்நாடு அரசு மின் வாரிய விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும், எனவே தனது மேல்முறையீட்டு மனுவை ஏற்று தனது வீட்டிற்கு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் தனது ஓட்டு வீட்டிற்கு புதியதாக மின்னிணைப்பு வேண்டி 17.01.2021 தேதி அன்று விண்ணப்பம் (08423012138) செய்து, இணைய வழியாக பணம் ரூபாய் 2818/– செலுத்தியதின் அடிப்படையில் பிரிவு அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், விண்ணப்பதாரரின் வீட்டிற்கு மின்னிணைப்பு வழங்கிட மின்விஸ்தரிப்பு பணி செய்தால்தான் மின்னிணைப்பு வழங்க முடியும் என்பது முதலில் களஆய்வில் கண்டறியப்பட்டதாகவும், ஆதலால் புதிய மின்தடம் அமைத்து மதிப்பீடு தயாரித்திட புதியதாக அமைக்கப்படவேண்டிய தாழ்வழுத்த வழிதடத்தின் உரிமையாளர் சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு திருப்பதி, த/பெ.முத்தக்கவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலம் ஆகும் என்பது தெரியவந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி கிராம சர்வே எண் கொண்ட நிலத்தில் ஏற்கனவே சென்றுக் கொண்டிருக்கும் இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதை உள்ளதாகவும், அவற்றில் இருந்துதான் மேற்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கிட மின்நீட்டிப்பு செய்யப்படவேண்டும் எனவும், அதன்படி மேற்படி சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 நிலத்தின் வழியாக ஏற்கனவே கட்டமைக்கப்பட்டுள்ள இரண்டு மின்கம்பிகளுடன் உள்ள தாழ்வழுத்த மின்பாதையில் இருந்து இரண்டு மின்கம்பம் அமைக்கும் வகையில் வாரிய விதிகளின்படி மதிப்பீடு பிரிவு அலுவலரால் தயாரிக்கப்பட்டு உரிய மதிப்பீட்டு அனுமதி பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 வாரிசுதாரர் அடிப்படையில் மின்கம்பம் அமைக்கும் இடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்த இடமாக கருதி மதிப்பீடு கட்டணம் செலுத்துமாறு உத்தரவு பிறப்பித்ததுள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் மேல்முறையீட்டாளரின் வீடு சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1H1A இல் தான் அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பது அறியமுடிகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததால் மின்இணைப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A என்பது உட்பிரிவாகி 125/1A1 எனவும் 125/1A2 எனவும் பிரிந்துள்ளதாகவும், 125/1A கிராம சர்வே எண்ணில் ஒரு பழைய தாழ்வழுத்த மின்கம்பம் உள்ளதாகவும், 125/1H1A–ல் மின்கம்பம் எதும் இல்லை எனவும், மேலும், மேற்படி கிராம சர்வே எண்ணில் தாழ்வழுத்த மின்கம்பம் ஏற்கனவே அமைக்கப்பட்டு அம்மின்கம்பத்திற்கு அருகாமையில் உள்ள கிராம நத்தம் சர்வே எண்களான 125/1B இல் 423–010–344 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1C–இல் 423–010–824 என்ற வீட்டு மின் இணைப்பும், 125/1D–இல் 423–010–298 என்ற வீட்டு மின்இணைப்பும், 125/1E–இல் 423–010–689 என்ற வீட்டு மின்னிணைப்பும், 125/1G–இல் 423–010–295 ஆகிய வீட்டு மின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இந்நிலையில் திருமதி பேபி அவர்கள் சின்னவேப்பம்பட்டு கூட்டு பட்டா கிராம சர்வே எண் 125/1H1A–இல் கட்டியுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க சின்னவேப்பம்பட்டு சர்வே எண் 125/1A1–இல் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த தாழ்வழுத்த மின்கம்பத்தில் இருந்து மின்விஸ்தரிப்பு பணி மேற்கொண்டால் தான் மின் இணைப்பு வழங்க முடியும் என்ற நிலை உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின் பகிர்மான விதித்தொகுப்பு விதி 29(16)–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"‘29 Service lines:*
> *xxx*
> *(16). Having agreed on the position of point of supply, the Engineer will render to the intending consumer an estimate for the cost of laying the service line for the portion inside the consumer's premises if any, barring the cost of distribution Transfomer and allied structure materials and accessories. Any work of laying the service line will be taken up only after the intending consumer pays such estimated amount in advance in full."*

7.10 மேற்கண்ட விதியின்படி மின்னிணைப்பு தொடர் நுகர்வோரின் வளாகத்தில் அமைக்கப்பட வேண்டிய நேர்வில் மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் மின்மாற்றி மற்றும் அது தொடர்பான மின்சாதனங்கள் ஏதேனும் அமைக்கப்பட நேர்ந்தால் அதற்குண்டான தொகையை தவிர்த்து அவ்வளாகத்தில் அமைக்கப்படும் மின்

தொடருக்கான மதிப்பீட்டு தொகையை முன்கூட்டியே செலுத்தவேண்டும் என அறியமுடிகிறது. கேட்புரையின் போது எதிர்மனுதாரர் தனது வாதத்தில் மேல்முறையீட்டாருக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மின் நீட்டிப்பு செய்ய இரண்டு மின்கம்பங்கள் நடப்பட வேண்டிய நிலையில் அது மேல்முறையீட்டாளரின் தகப்பனாருக்கு சொந்தமான நிலமாக இருப்பதால் வாரிசு உரிமை அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கும் சொந்தமாகும் எனவும், எனவே மேல்முறையீட்டாளர் மின்கம்பங்களுக்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும் எனவும் வாதிட்டுள்ளார்.

7.11 மேலும், மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள உயில் சாசனப்பத்திரம் சம்பந்தமாக சின்னவேப்பம்பட்டு கிராம நிர்வாக அலுவலருடன் கூட்டாக களஆய்வு செய்யப்பட்டதில் உட்பிரிவு செய்யப்பட்ட சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1A1 இல் வீடு ஏதும் இல்லாததும், சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் தான் வீடு அமைந்துள்ளதாகவும், சின்ன வேப்பம்பட்டு கிராம சர்வே எண் 125/1HIA நிலம் திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமாக இருப்பதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் சின்னவேப்பம்பட்டு கிராம சர்வே மண் 125/1H1A இல் வீடு அமைந்துள்ள இடம் அவரின் தந்தையான திரு.திருப்பதி த/பெ.முத்தகவுண்டர் மற்றும் 5 நபர்களுக்கு சொந்தமானது எனவும் மேல்முறையீட்டாளர் வாரிசு அடிப்படையிலேயே மின்னிணைப்பு கோருவதாகவும் அறிய முடிகிறது. மேலும் மின் தொடர் அமையவுள்ள மேற்கண்ட பாதையானது கிராம / ஊராட்சி நிர்வாகத்தால் பொதுப்பாதையாக அங்கீகரிக்கப் பட்டதாக அறியப்படவில்லை என்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்படுகிறது.

7.12 எனவே, மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என தீர்வு செய்யப்படுகிறது. மேலும் கேட்புரையின் போது இவ்வழக்கில் எதிர்மனுதாரர் 17.01.2021 அன்று பதிவு செய்த விண்ணப்பத்தை 19.03.2021 அன்று மதிப்பீட்டு கட்டணம் செலுத்தவில்லை என்று விண்ணப்பத்தை ரத்து செய்த பின்பும் அந்த கட்டணத்தை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்கவில்லை என அறியவருதால் விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 மேற்கண்ட பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி, திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 43/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திருமதி. T. பேபி, – By RPAD
எண்.3/81, பணங்தொப்பு ஏரி,
சின்ன வேப்பம்பட்டு, கலந்திரா, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / பகிர்மானம்/ வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம்,
வாணியம்பாடி, வேலூர் – 635 751.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப / தெற்கு/வாணியம்பாடி,
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துணை மின் வளாகம், வேலூர் மெயின் ரோடு,
ஆலங்காயம், வாணியம்பாடி தாலுக்கா, வேலூர் – 635 751.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
2/4B, பாலம்மாள் காலனி, திருப்பத்தூர் – 635 601.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.